**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருத்தணி**
**அ.வ.எண்.137/2014**

தேதி . 06.09.2021

பெயர் . ரவி

த/பெ . லட்சுமிபதி நாயுடு

வயது . 54

வா.சா. 1

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

வழக்கு சொத்து பட்டா எண் 595 என்றால் சரிதான் 7 பேருக்கு பாகம். வழக்கு சொத்தின் ச்ர்வே எண் 136/12ல் ராமசாமி நாயுடு மகன் 4 பேருக்கு அவருடைய பங்கில் 1/4 பங்கு உண்டு என்றால் சரிதான். முனிசாமி நாயுடு வாரிசுகள் 7பேர்கள் பதிவு செய்யப்பட்ட பாகப்பிரிவினை செய்துகொண்டார்களா என்றால் இல்லை வாய்மொழியாக பிரித்து கொண்டார்கள். வழக்கு சொத்து ச்ர்வே எண் 136/12ல் மொத்தம் 47 ஏர்ஸ் ஒரு ஏக்கர் 17 சென்ட் அது 7 பேருக்கு கூட்டாக பாத்தியம் என்றால் சரிதான். 132/13ஏ, 132/13சி மற்றும் 132/6 மொத்தம் 73 சென்ட் 7பேருக்கு பாத்தியம் என்றால் சரிதான். வா.த.சா.ஆ.1ல் வழக்கு சொத்து வடக்கில் என்னுடைய நிலம் உள்ளது என்றால் சரிதான். வா.த.சா.ஆ.1 வழக்கு சொத்தின் வடக்கில் 132/13ஏ, 13சி, 132/6ல் உள்ளது என்றால் இல்லை. வழக்கு சொத்தை என் அ்பபா முனிசாமி நாயுடு வாங்கும் போது அவருடைய அப்பா நரசிம்மநாயுடு உயிருடன் இருந்தாரா என்றால் உயிருடன் இருந்தார் ஆனால் உடல்நிலை குறைவால் இருந்தார். முனிசாமி நாயுடுவிடம் என் அப்பா வழக்கு சொத்தை கிரையம் வாங்கிய போது நரசிம்ம நாயுடுவின் மனைவி, மகள் உயிருடன் இருந்தார்கள் என்றால் யாரும் உயிருடன் இல்லை. வா.த.சா.ஆ.2 என்ன பத்திரம் என்றால் என்னுடைய சித்தப்பா முனிசாமி நாயுடு மனைவி பர்வாதிவிடம் திருட்டுதனமாக கிரையம் வாங்கியது. அவளை நீதிமன்றத்தில் சாட்சியாக விசாரிக்க போகிறேனா என்றால் ஆம். வழக்கு சொத்து கூட்டு குடும்ப சொத்து நான் பாகபிரிவினை கேட்காமல் இந்த வழக்கு தாக்கல் செய்தது தவறு என்றால் சரியல்ல. முனிசாமி நாயுடுவின் மற்ற 4 வாரிசுகளுக்கும் பாத்தியப்பட்டது என்றால் அவர்களிடமிருந்து நான் கிரையம் வாங்கி அனுபவித்து வருகிறேன். அவ்வாறு நான் வாங்கிய கிரைய பத்திரத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. வழக்கு சொத்திற்கும் வா.த.சா.ஆ.1 ல் உள்ள சொத்திற்கும் சம்மந்தமில்லை என்றால் சரியல்ல. எனவே இந்த வழக்கு தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல.

**மறு விசாரணைக்காக ஒத்திவைக்கப்படுகிறது.**